# போர்வாள்

மறுமலர்ச்சி நிலையம்,
அரிசிப்பாளையம்,
சேலம்.

ஒரே ஒரு
ஆயுதம்
இதய ஒலி
கேட்கிறது
மயானத்தில்
முத்தம்
நாடும் ஏடும்

...ியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
...: இளஞ்செழியன், B. A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு.


...இதழ் அணா 1

...ர் 1 | சென்னை 30—8—47 சனிக்கிழமை | வீச்சு 3

BADRU BOOK DEPOT
ARUNACHALA ACHARI ST., SALEM.
பத்ரு புக் டிப்போ
அருணாசல ஆசாரி தெரு, சேலம்.

ஹிந்துஸ்தான் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு ஆகஸ்டு 15-ம்நாள் காலை, டில்லியில் சுதந்தர இந்தியாவின் நல்வாழ்வை முன்னிட்டுவெட்டுப்புரோகிதர்கள் வளர்த்த ஓமகுண்டத்தின் முன் அமர்ந்து வணக்கம் செலுத்தினாராம். புரோகிதர் கூட்டம் தந்த ஆசீர்வாதங்களையும் பய பக்தியுடன் ஏற்றுக்கொண்டாராம். சுற்றிலும் பல அன்னைமார் ஆரத்தி எடுத்து, திருஷ்டி கழித்து, தலைவர் நேருவின் நெற்றியில் திலகம் தீட்ட அதை அவர் மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனராம். தான் ஆட்சிப் பீடம் ஏறுமுன்னால் நிகழ்த்தப்பெற்ற இவ் வைதீகச் சடங்குகள் அத்தனைக்கும் அவர் உள்ளம் ஒப்பினராம்; அவை சரி எனச் செப்பினராம். பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன இதுபோல. நேரு வைதீக இருந்தவாயிருந்து இப்படியெல்லாம் நிகழ்ந்திருந்தால் வியப்பதற்கொன்றுமில்லை. ஆனால் நேருவோ அதி தீவிரப் புரட்சிவாதி. "சடங்குகள் தொலையவேண்டும்; சம்பிரதாயங்கள் அழிய வேண்டும்; பழமை மடியவேண்டும்; மாஸ்கோ மணம் திக்கெட்டும் கமழவேண்டும்" என்றெல்லாம் பல ஆண்டுகளாக ஓயாது கூறிவருபவர். முன் ஒரு நாள் வழக்கு மன்றத்தில், சாட்சிக் கூண்டில் நேரு நின்றபோது "வேதம் கடவுள் சாட்சியாக நான் கூறுவதெல்லாம் சத்திய வாக்கு" என்று துவக்கி சாட்சியம் கூறும்படி அவர் கேட்டுக் கொள்ளப் பட்டார். நேரு, 'உடனே எனக்கு அவை இரண்டிலும் நம்பிக்கையில்லை. நான் அப்படி சொல்ல மாட்டேன்." என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிட்டார். அன்று! அவர் ஒரு பச்சைநாஸ்திகர், கடவுளை நம்பாதவர்; வேதத்தையும் மறுப்பவர்! ஆனால் நாஸ்திகர் நேரு இன்று ஓமகுண்டத்தின்முன் அமர்கிறார். அன்று நாஸ்தீகர் — இன்று வைதீகர்! அன்று புரட்சிவாதி—இன்று பழமையில் பற்றுடையார்! ஏன் இந்த மாற்றம்? எப்படி வந்தது இந்த முரண்பாடு — அதுவும் நேருவைப் போன்ற சிறந்த அறிவாளியிடம்? இதுதான் நமக்குப் புரியவில்லை.

## நேரு — அன்றும், இன்றும்.




———

## ஒரே ஒரு ஆயுதம்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள் என்பது அவர்களுடைய எண்ணம்! அந்த எண்ணம் பலிக்காது. பலிக்கவேண்டுமாயின் தமிழர்கள் ஏமாளிகளாய் இருக்க வேண்டும். தமிழர்கள் இன்று ஏமாளிகள என்று மந்தமதியினரும் கூறத் துணியார்.

அந்தச் சிறு கூட்டம் இதற்கு முன் வீசிய பல ஆயுதங்களும் சுயமரியாதைப் போர்வாளின் முன் நேர் நிற்கமுடியாமல் கூர் மழுங்கிப்போனது போலவேதான் இந்தப் புதிய ஆயுதமும் பயனற்றுப் போகும். இதை உணர்ந்து கொள்ள பெரிய மேதாவித்தனம் ஒன்றும் தேவையில்லை. சாதாரணப் பகுத்தறிவே இதைச் சொல்லிவிடும்.

"நாஸ்திகம்! ஜாக்கிரதை!" அவர்களிடம் உள்ள ஒரே ஒரு ஆயுதம், கடைசீ ஆயுதம், நம்மை அழிப்பதற்கென்றே அவர்கள் தங்கள் பாசறையில் தயாராய்வைத்துள்ள ஆயுதம் இதுதான்.

இது நம்மை வீழ்த்திவிடும் என்று அவர்கள் இன்னமும் நம்புகிறார்கள்! பரிதாபம்! கடலில் வீழ்ந்தவன் கையில் எதிர்ப்படும் சிறு துரும்பையும் பெரிய கப்பலெனவே கருதுவான். ஆபத்து அவனை நெருங்குகிற அந்த விநாடி அவன் அப்படி எண்ணுவதும் இயற்கையே. ஆனால் துரும்பு என்ன கப்பலா அவனைக் காப்பாற்ற!

**மதிப்புரைகள்**

**அடுத்த இதழில்**

## மயானத்தில் முத்தம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொண்டேன். வருத்தம் என் உள்ளத்தே பொங்கியெழ, வார்த்தைகள் வெளிவர மறுத்தன. மனதிலேயே கதறினேன்!

"சாமி, நேரமாகுதுங்கோ!" என்றான் வெட்டியான். திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் கண்களிலும் நீர் வழிந்து கொண்டிருந்தது.

குனிந்தேன், அவள் முகத்தை உற்று உற்றுப் பார்த்தேன் கடைசி முறையாக, ஒரு முத்தமும் கொடுத்தேன்! பிறகு அவளை, என் பொருட்டு உயிர் விட்ட குணக்குன்றை, தூக்கிக் குழியில் வைத்தேன்! அவள் பக்கத்திலேயே என் ஆசையையும் வைத்தேன்! இரண்டும் மண்ணில் மறைந்தன!

தள்ளாடித் தள்ளாடி ஆஸ்டலுக்கு வந்து சேர்ந்தேன். இரவெல்லாம் அழுது அழுது என் கண்கள் வீங்கி விட்டன. பொழுதும் புலர்ந்தது.

காலை பத்துமணிக்குத் தந்தியொன்று வந்தது எனக்கு. தந்தியைப் பரபர வென்று பிரித்துப் படித்தேன். மற்றோர் செய்தியிடி! "தந்தை வைசூரியால் இறந்து விட்டார். ஊருக்கு வராதே" என்றிருந்தது அதிலே.

மாதவா! அந்த நேரத்தில் என் நிலைமை எப்படி யிருந்திருக்கும் என்பதை நீயே யூகித்துக்கொள் வைசூரி நமக்கும் வரட்டும், நாமும் இறப்போம்!" என்ற தீர்மானத்துடனேதான் ஊருக்கு வந்தேன்! ஆனால் மரணம் என்னைத் திரும்பிப் பார்க்கவும் மறுத்து விட்டது!

"இதுதான் மாதவா, என் சோக வரலாறு!" என்று சொல்லி முடித்தேன். அவன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான்!

## நாடும் ஏடும்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதிக்கும் ஆற்றல் படைத்த காமதேனுவும் கற்பக விருட்சமும் அவரிடம் இருக்கின்றனவோ? அல்லது தூங்கிக்கிடக்கும் தமிழர்களை இத்தகைய அதிர்வேட்டுகளின் மூலம் எழுப்பவேண்டும் என்பது அவர்
கருத்தா?.........ஐயோ பாவ
அய்யர் கனவுலகில் சஞ்சரிக்
றார். இல்லையானால், என்னதான்
ஆசை வெட்கமறியாது என்
ஆம் இப்படியா பேசுவார், அது
வும் பொதுக் கூட்டம் ஒன்றில்

## சோஷிய லிஸ்டுகளே போய் வாருங்கள்!

அகில இந்திய காங்கிரசின்
பொதுச் செயலாளர் சங்கர ரா
தேவ், "சோஷியலிஸ்டுகள் கா
கிரசுடன் ஒத்துழைக்கும பாதை
யிலிருந்து விலகிச் செல்கிறா
கள்; அவர்கள் இனிமேல் கா
கிரசில் இல்லாமலிருப்பதே ந
லது." என்ற கருத்துடைய
அறிக்கை யொன்று விடுத்து
ளார். நேதாஜி என்று இன்று
போற்றிப் புகழப்படும் சுபா
சந்திர போசை நேற்று விரட்டிய
காங்கிரஸ்-கம்யூனிஸ்டுகள் நாட்
டைக் காட்டிக் கொடுத்த ஐ
தாம் படைக்காரர்கள் என்று
சொல்லி அவர்களைச் சற்று முன்
விரட்டிய காங்கிரஸ்—இந்துமத
ஆச்சார அனுஷ்டானங்களை
அரசியலில் புகுத்திப் புகுத்தி
இஸ்லாமிய இனத்தவரின்
வெறுப் புணர்ச்சியைப் பல
ஆண்டுகளுக்கு முன்னரே தேடி
கொண்ட காங்கிரஸ் — ஆரிய
கூட்டத்திற்கு அளவு கடந்த
சலுகை தந்து தந்து பிராமண
ரல்லாதார் இயக்கத்தைத் தென்
னாட்டில் ஊட்டி வளர்த்த கா
கிரஸ்—ஆந்தித் திராவிடர் ந
உரிமைகளைப் புறக்கணித்து
புறக்கணித்ததன விளைவாக
அவர்கள் ஒரு தனிக் கட்சி
அமைத்துக் கொள்ள இடம்
தந்த காங்கிரஸ் இன்று சோஷிய
லிஸ்டுகளையும் விரட்டுகிறது.
சோஷியலிஸ்டுகள் இனியாவது
காங்கிரஸ் வட்டாரத்தை விட்டு
வெளியேறி, ஜனநாயக முன்
னணி அமைத்து, மக்கள் உரிமை
யைக் காப்பதற்கு முனைந்து
நின்று போராடுவார்களா?

**கற்பனைச் சித்திரம்:**

# மயானத்தில் முத்தம்

[இராதா மணாளன்]

மாடியிலே நானும் என் தோழன் மாதவனும் உட்கார்ந்து கொண்டு, உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருந்தோம். பால் நிலவு இன்பமாகத் தன் குளிர்ந்த ஒளியை வீசிக் கொண்டிருந்தது.

"வெண்ணிலா வெகு ஜோராமே காதலருக்கு!" என்றான் மாதவன். நானும் உற்று நோக்கினேன் நிலவை. அன்றொரு நாள், அவளை என் மடியின் மேல் சாய்த்துக் கொண்டு, "பத்மா! என் கண்ணே! மாசற்ற உன் அழகிய முகத்தைக் கண்டு மதி வெட்கி மேகங்களிடையே மறைகிறாளே அதனைப் பார்! அதோ, அதோ பார், நாம் இன்பத்திலிருப்பதை நட்சத்திரங்கள் கண் சிமிட்டிச் சிமிட்டிக் கண்டு கண்டு களிப்பதை! தென்றல்........"

"கவிஞரே போதும்! வர்ணித்துக் கொண்டே போ-னா-ல்......"

"தேவிக்குத் தேவையானது இதுதானே!" என்று கூறிக் கொண்டே, அவளது குளிமையான கன்னத்தில் குனிந்தோர் முத்தம் தந்தேன்! சிற்றிடையாளின் சித்தம் குளிர்ந்தது! முல்லைப் பற்கள் வெளித் தெரிய முறுவல் புரிந்தாள்! சிரிப்பைச் சிந்திய அவளது செவ்விதழ்களுக்கோர் முத்தம்......—மங்கிய இந்த நினைவு நிலவைக் கண்டதும் என் நினைவிற்கு வந்தது. வருத்தம் என் உள்ளத்தை வலை போட்டிழுத்தது. என் முகம் வாடியது!

"கண்ணா! என்ன, வெண்ணிலவை நோக்கினாய், விசனப் படுகிறாய்! உனக்கும் ஏதாவது காதலி——சொல்லு கண்ணா!" என்று கூறி, என் தோளைப் பிடித்துக் குலுக்கினான் மாதவன்—என் ஆருயிர்த் தோழன். பாவம் என் காதற் கதையை அவன் அறியான். சென்னையிலே நடந்த அச்செய்தியை அவனெப்படி அறிவான்.

என் உள்ளத்திலோ அவளை நினைத்ததும் ஒரு பெருத்த சுமை ஏறிவிட்டது. அவளது வரலாற்றைக் கூறினால்தான், என் மனம் சாந்தியடையும் போல் தோன்றியது. சிறுவயதிலிருந்து பழகிய அருமை நண்பனிடத்தில் கூறுவதிலே தவறென்ன வென்று நினைத்தேன். சரியோ, தவறோ அதைப் பற்றி எனக்குக் கவலை யில்லை, கூறினால்தான் என் மனதிலேற்பட்டிருக்கும் பாரம் குறையும்! குனிந்திருந்த என் தலையைத் தூக்கி மாதவனை நோக்கினேன். அவன் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கண்ணா! ஏதாவது தவறுதலாகக் கேட்டு விட்டேனா?"

"அப்படி யொன்று மில்லை மாதவா."

"பின் ஏன் வருந்துகிறாய்."

"காதலி யென்றாய் அல்லவா?"

"ஆமாம்!"

"அவளை நினைத்து"

"வருந்துகிறாயா? அடேடே! எனக்குச் சொல்லவே யில்லையே, உன் காதலியைப் பற்றி! யார் அவள்? எங்கே யிருக்கிறாள்?"

"அவள் இப்பொழுதில்லை, மாதவா இறந்து விட்டாள்!"

"இறந்து விட்டாளா?" என்று இடி விழுந்தவனைப்போல் கேட்டான். என் உள்ளத்தே வேதனை இன்னும் அதிகமாகியது! எவ்வளவோ அடக்கியும் என்னால் கட்டுப்படுத்த முடியாமல் என் கண்களிலிருந்து நீர் கசிய ஆரம்பித்து விட்டது.

"மாதவா! அவள் இறக்கவில்லை, கொல்லப் பட்டாள்! வேற்றார் யாரும் அவளைக் கொல்லவில்லை, நானே தான் அவளைக் கொன்றேன்!" மாதவன் தன் கண்களை நன்றாகத் திறந்து உற்று நோக்கினான்! அவனது பார்வையிலே, திகைப்பும் ஆச்சரியமும் கலந்திருந்தது, நிலவொளியிலே நன்கு தெரிந்தது.

"கண்ணா, என்ன கூறுகிறாய்?"

"உண்மையைத் தான் உரைக்கின்றேன், மாதவா. நானொரு பெண்ணைக் காதலித்தேன். கொஞ்சிய என் காதலியைக் கொன்றேன்!"

"கொன்றாயா? நீயா? எனக்குச் சற்றேனும் நம்பிக்கை ஏற்படவில்லையே! உன் இளகிய உள்ளம் ஒரு அணங்கின் ஆவியைப் பறிக்குமளவிற்குத் தைரியத்தைத் தந்திருக்காதே!"

"ஆம் தைரியம் பிறக்க வில்லை! அதனால்தான் அவள் இறந்தாள்!"

"காதலித்தேன், கொன்றேன்; தைரியம் பிறக்கவில்லை, அதனால் இறந்தாள்; என்ன கூறுகிறாய் கண்ணா?"

"இந்தக் கொலையிலே ஒரு அதிசயம்! கொலைக்கு உடந்தையாக இருந்தார்களென்று—பொய் கூறி—சிலரைச் சிறையிலே தள்ளியதை நீ அறிவாய்! அவளைக் கொன்றது நான் தான்! அதனை அவள் பெற்றோர் அறிவர், அவள் அண்ணன் அறிவான்—ஏன் அந்தத் தெருவிலிருந்த அனைவருக்குமே தெரியும்! கொலையைச் செய்தவன் நான் தான் என்று வெளிப்படையாகத் தெரிந்திருந்தும், போலீஸ் என்னை அண்டவில்லை! கை கட்டி நான் கோர்ட்டில் நிற்கவுமில்லை, சட்டம் என்னைத் தண்டிக்கவுமில்லை!"

"எனக் கொன்றுமே புரியவில்லையே, கண்ணா!"

"மாதவா! புரியாதுதான். உனக்குப் புரியும்படி என் சோக வரலாற்றைச் சொல்லுகிறேன்! நீ தெரிந்துகொள்ள வேண்டுமென்ப

தற்காக அல்ல, என் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் வேதனையைக் குறைத்துக் கொள்வதற்காக!

மூன்றாண்டுகளுக்கு முன்பு நான் கல்லூரியில் சேர்ந்தேன். ஆஸ்டலில் இடம் கிடைக்காததனால், என் தந்தையின் விருப்பப் படியே, அவர் நண்பர், போலீஸ் இன்ஸ்பெக்டர் முருகேச முதலியார் வீட்டில் தங்கினேன். முதலியார் மிகவும் நல்லவர். என்னிடத்தில் அன்பாக நடந்து கொண்டார். நான் படிக்க, அவர் வீட்டின் முன்னறையைக் கொடுத்திருந்தார்.

ஒரு நாள் நான் கல்லூரியிலிருந்து வரும்போது, வாயிற்படியினருகே ஒரு அழகி நின்று கொண்டிருந்தாள்! என்னைக் கண்டதும் மான் போல் ஓடி உள்ளே மறைந்தாள்!

முதலியாருக்கு ஒரு மகளிருப்பது எனக்குத் தெரியும். சிறுமியாய் அவள் இருந்தபொழுது அவளைப் பார்த்திருக்கிறேன். அந்த பத்மாவா இவ்வளவு பெரியவளாகி விட்டாளென்று ஆச்சரியப் பட்டேன்.

மாதங்கள் சில சென்றன. மாலை நேரத்தில் நான் வரும் பொழுதெல்லாம், வாயிற்படியின் அருகே பத்மா நின்று கொண்டிருப்பாள். என்னைக் கண்டதும் உள்ளே ஓடி ஒளிந்து கொள்வாள்! சில நாட்கள் சென்றன! என்னைக் கண்டதும் நடந்து உள்ளே செல்வாள்! இன்னும் சில நாட்கள் சென்றன! நான் வீட்டினருகே வரும் வரைக்கும் என்னையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, மெதுவாக உள்ளே செல்வாள்!

இப்படியாக அவளுக்கு என் மேல் 'ஆசை' யிருப்பதாக அறிந்து கொண்டேன். என் அறையில் படுத்துக்கொண்டு அவளது அழகிய உருவத்தை நினைத்துக் கொண்டிருந்தேன். அவளை எண்ண எண்ண என் உள்ளத்தில் ஆசை யெழுவதைவிட அச்சமே அதிகமாக எழுந்தது! என் தந்தையின் தோழர் மகள்—போலீஸ் அதிகாரியின் பு[illegible]—அவளை நாம் எண்ணவோ, செய்[illegible] தந்தை அறிந்தால் நம்மைப் பற்றி என்ன என்னுவார்—இப்படிப்பட்ட எண்ணங்கள் என் மனத்தே எழுந்தன! என் உள்ளமென்னும் ஏட்டிலிருந்த, பத்மா என்ற ஓவியத்தை அழித்து விட்டேன்.

மறுநாள் மாலை, வழக்கப்படி வாயிற்படியில் அவளைக் கண்டேன். அவள் தன் கண்ணென்னும் ஓவியக் கோலால், தன் உருவமென்னும் சித்திரத்தை, மறுபடியும் என் மன ஏட்டிலே தீட்டினாள்! என் அறைக்குச் சென்றதும் மன உறுதி என்னும் 'ரப்பரால்' அச்சித்திரத்தை அழித்து விட்டேன்! தினம் தினம் அவள் தீட்டுவாள், நான் அழிப்பேன், இப்படியே நடந்து கொண்டிருந்தது. நாளாவட்டத்தில் ரப்பரும் தேய்ந்துவிட்டது, சித்திரமும் ஏட்டிலே அழிக்க முடியாத அளவிற்கு ஆழப் பதிந்து விட்டது!

மாதவா! ஒரு நாள் பத்மாவின் தாயும், தமையனும் அவர்கள் ஊரிலே நடந்த ஒரு கல்யாணத்திற்குச் சென்று விட்டனர். இரவு, வேலையின் நிமித்தமாக அவள் தந்தை வெளியே சென்று விட்டார். வீட்டிலே பத்மாவும், கண்ணொளி சிறிது மங்கிய அவளது பாட்டியும் தானிருந்தார்கள்.

நான் என் அறையிலே எழுதிக் கொண்டிருந்தேன். சுமார் பதினொரு மணியிருக்கும். என் அறையின் வெளியே வளையல் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். யாரையும் காணோம்! 'நினைப்பு' போலிருக்கிறது என்றெண்ணிக் கொண்டேன். மறுபடியும் சப்தம் கேட்டது, திரும்பிப் பார்த்தேன்! என் அறையின் வெளியே பத்மா நின்று கொண்டிருந்தாள்! எனக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை! என் உடலில் நடுக்கம்! உள்ளத்தில் பயமும் ஆசையும்!

மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "உள்ளே வாயேன் பத்மா!" என்றதும் என் நாக்குக் கனத்து அசைவற்று நின்று விட்டது. உணர்ச்சி மிகுதியால் பத்மாவின் முகமே மாறியிருந்தது. அப்பொழுது அவள் பார்த்த பார்வை, மாதவா, இன்னும் என் மனக்கண்ணிலிருந்து மறையவே இல்லை!

எழுந்தேன் தலை குனிந்து நின்றி[illegible] பற்றினேன். அவள் உடலி[illegible] அதிர்ச்சியை நான் நன்கு உணர்ந்தேன்!

அவளும் நானும் அறையினுள்ளே வந்தோம். கட்டிலின்மேல் உட்கார்ந்தேன். அவள் அருகே நாணத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

"உட்கார் பத்மா" என்றேன். ஆவல் நிறைந்த கண்களோடு என்னை நோக்கினாள்! அவளது சிவந்த இதழ்களிலே ஒரு இன்பப் புன்னகை தவழ்ந்தது! கட்டிலின்மேல் உட்கார்ந்தாள்.

"பத்மா, அம்மா எங்கே?"

"ஊருக்கு"

"ஏன்?"

"என் சித்தியின் மகளுக்குக் கல்யாணம்!"

"பாபம்! தன் மகளுக்கு இங்குத் திருமணம் நடந்து கொண்டிருப்பதைக் காணக் கொடுத்துவைக்காதவள் உன் தாய்! இப்படி வா பத்மா! இன்னுமா வெட்கம் அருகில் வா கண்ணே!" இப்படிக் கூறிக் கொண்டே அவள் அருகில் நானே நகர்ந்தேன். கொடி போன்ற அவளுடல் என் மேல் சாய்ந்தது. மார்போடு அணைத்தேன்! முத்தம்! இன்பம்! இன்பம்!!

நேரம் கிடைத்த போதெல்லாம் நானும் அவளும் சந்திப்போம்! ஆரத் தழுவி ஆனந்தத்தில் மூழ்குவோம்! கொஞ்சுவோம், இன்பத்தின் எல்லையையும் மிஞ்சுவோம்! இப்படிப்பட்ட இன்ப இரவுகள் பலப்பல சென்றன!

* * *

முதலாண்டு பரீட்சை முடிந்து நம் ஊருக்கு வந்தேன் மாதவா! இங்கே பொழுதுபோவதே எனக்கு மிகுந்த சிரமமாயிருந்தது. எந்நேரமும் அவள் பிரிவால் என் மனம் வருந்திக் கொண்டே இருந்தது!

அப்பொழுது ஊரிலே வைசூரி மிகவும் அதிகமாய் இருந்ததால், "கண்ணா, நீ சென்னைக்குச் சென்றுவிடு, இனி இங்கிருக்காதே, வைசூரி அதிகமா யிருக்கிறது. இந்த ஆண்டு முதலிலேயே ஆஸ்டலில் சேர்ந்துவிடு. முதலியார் வீட்டிலே இனியிருப்பது அவ்வளவு நல்லதல்ல" இப்படி என் தந்தை ஒரு நாள் கூறினார். அப்பொழுது கல்லூரி திறக்க இன்னும் பதினைந்து நாட்களிருந்தன.

சென்னை சென்றேன். ஆஸ்டலில் இடந்திறந்த விண்ணப்பம் செய்து கொண்டேன். ஆஸ்டல் திறக்கும் வரையில் பத்மாவின் வீட்டிலேதான் தங்கியிருந்தேன்.

முன்போல் அவள் தந்தை என்னிடம் அன்பாகப் பேசவில்லை. "எப்பொழுது வந்தாய் தம்பி! ஊரிலே அம்மா அப்பா சுவுக்கியமா?" என்று ஊரிலிருந்து வந்த உடனே அவள் தாய் என்னைக் கேட்பது வழக்கம். ஆனால் இந்த முறை அப்படியொன்றும் கேட்கவில்லை. என்னைக் கண்டதும், அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டனர். அடிக்கடி என் அறையின் பக்கமாய் வந்து வந்து போகும் என் இன்ப பத்மாவையும் நான் ஒருதரம் கூட காணவில்லை! இந்தப் புதிய மாற்றத்தைக் கண்டதும், நான் பெருத்த ஏமாற்றமடைந்தேன்!

இப்படியே இரண்டு நாட்கள் சென்றன. இரவு நடுநிசி! நேரமாகியும் நித்திரையின்றி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தேன். என் அறையின் கதவு அசையும் சப்தம் கேட்டது. அப்பக்கம் நோக்கினேன். இளவஞ்சி வருகிறாள் என்பதறிந்து இன்புற்றேன். வந்தாள்! என் அருகே அமர்ந்தாள்.

"பத்மா" என்றேன் அன்பு நிறைந்த குரலிலே. பதிலில்லை. அவள் விம்மும் சப்தம் கேட்டது. அவள் உடலைத் தொட்டேன். வியர்வை கொட்டிய வண்ணமிருந்தது. "பத்மா, ஏன் அழுகிறாய்? வீட்டிலே உன் அப்பாவும் அம்மாவும் இல்லையா?"

"எல்லோரும் நன்றாகத் தூங்குகிறார்கள்!"

"வருத்தமேன் கண்ணே!...... சொன்னால்தானே எனக்குத் தெரியும். உன் பெற்றோர் ஏன் என்னிடம் பேசவில்லை. நம் கள்ளக் காதல் அவர்களுக்குத் தெரிந்துவிட்டதா?......சொல்லு பத்மா.... பேசாமலே இருந்தால் எதுதான் எனக்கு எப்படிப் புரியும்!"

"தெரிந்து விட்டது! அதனாலே தான் எனக்கு விரைவிலே மணம் முடிக்க ஏற்பாடுசெய்து விட்டார்!" என்று கூறி, என்மேல் சாய்ந்து, உடல் குலுங்க விம்மினாள்! அவள் கண்களில் கண்ணீர் மளமளவென்று வழிந்தது! "மணம்" என்ற அந்த மூன்று எழுத்துக்கள் — எழுத்துக்களல்ல அவை, பீரங்கிகள்—எங்கள் இன்பக் கோட்டையைத் தவிடு பொடியாக்கின! ஒன்றும் புரியாமல் மரம் போலிருந்தேன்!

அத்தான்!

"ஏன் பத்மா?"

"இப்பொழுது நமக்கென்ன வழி?" பத்மாவின் இக்கேள்விக்கு என்ன பதில் கூறுவதென்றே எனக்குத் தெரியவில்லை. யோசிக்கலாமென்றாலோ சிந்திக்கவே முடியாத சூனிய வெளியில் நான் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்! இருவரும் மௌனமாகவே இருந்தோம்!

"அத்தான்! இப்பொழுது எனக்கு மணம் வேண்டாமென்று என் பெற்றோர்களிடம் எவ்வளவோ வேண்டினேன், அழுதேன்! அவர்கள் மனம் சிறிதும் கரையவேயில்லை!.........தங்களைத்தான் கல்யாணம் செய்துகொள்வேனென்று துணிந்து ஒருநாள் என் தாயிடம் கூறியும் விட்டேன்! பதிலென்ன கிடைத்தது தெரியுமா அத்தான், என் தந்தையின் கைகளால், என் கன்னங்கள் வீங்கு மளவிற்கு அடிகள் கிடைத்தன! அத்தான் ஏன் பேசாமலிருக்கிறீர்! இந்த இரவிலே நாம் ஒரு முடிவிற்கு வந்து விட வேண்டும்"

"என்ன முடிவிற்கு பத்மா?"

"நாம் எங்கேயாகிலும் ஓடி விடலாமே!" என்று ஆவேசம் வந்தவளைப்போல் கூறினாள். ஓடி விடலாமென்று அவள் கூறியதும், ஆசையோடும் நம்பிக்கையோடும் என்னை வளர்த்து வரும், என் தாய் தந்தையர் என் எதிரேவந்து நின்றனர். நீர் நிறைந்த கண்களோடு, "கண்ணா, என் மகனே! உன்னை வளர்த்ததற்குப் பலன் இதுதானா! நல்ல பெயருடன் திகழும் நம் குடும்பத்தின் பெயரை நாசமாக்காதேடா கண்ணே!" என்று என் தாய் அழுவதைப்போல் தோன்றியது. என் தந்தையின் முகத்திலே பெருத்த ஏமாற்றத்தைக் கண்டேன். நம் ஒருவன் சுகத்திற்காக பெற்றோரை, வாட்டி வதக்கி, அவமானத்தில் அழச்செய்வது முறையாகுமா, ஒரு உத்தம மகனின் கடமையாகுமா என்றெண்ணினேன். காதலின் பெருமையை அறியாக் கசடனானேன் அந்நேரத்தில்!

"பத்மா!"

"அத்தான்!"

"நீயே யோசித்துப்பார்! நாம் ஓடி விட்டால் நம் பெற்றோர்களுக்கு எவ்வளவு அவமானம்! மதிப்போடு வாழ்ந்து வரும் உன் தந்தை வெளியே முகம் காட்டமுடியுமா?

"அதற்காக?"

"உன் பெற்றோரின்"

"விருப்பப்படியே நான் வேறொருவனை மணந்து கொள்ளவேண்டும்! அதுதானே தாங்கள் செய்யப் போகும் உபதேசம்!" இதைக் கூறியதும் அவள் முகம் கோபத்தால் சிவந்தது!

"ஆம் பத்மா!"

"ஆம்! தங்களை நம்பினேனே! எனக்கு இதுபோதாது, இன்னும் வேண்டும்! நான் வருகிறேன் அத்தான்! நன்றாக வாழுங்கள்!" என்று படபடவென்று கோபக் கனல் கக்கிவிட்டு இருகரமுங் குவித்து எனக்கு வணக்கம் செய்து விட்டு, வெளியே செல்லப் புறப்பட்டாள்!

"பத்மா!" என்றேன குழம்பிய உள்ளத்தோடு. தன் கண்களில் நெருப்புப் பொறி பறக்க என்னைத் திரும்பிப் பார்த்து விட்டு, வேகமாய்ச் சென்று விட்டாள்!

மாதவா! என் காதற் கப்பல் பெற்றோர் பெருமை என்ற புயல் வீசியதால், கோரமுடிவு என்ற கடலில் மூழ்கிச் சிதைந்தது!

சில தினங்களில் எனக்கு ஆஸ்டலில் இடம் கிடைத்து விட்டது. நான் ஆஸ்டலுக்குச் சென்று விட்டேன். என் உள்ளத்தே எந்நேரமும் வருத்தமென்ற விஷத்தேள் கொட்டிக் கொண்டே இருந்தது. "நாம் அவளுக்குத் தந்த பதில் சரியா?" என்று பலமுறை யோசித்தேன். முதலில் சரியென்று பட்டது. யோசிக்க யோசிக்க, தவறு, தவறு மட்டுமல்ல கோழைத்தனம், கோழைத்தனம் மட்டுமல்ல அளவிட முடியாத பெருத்த துரோகம் என்ற முடிவுக்கு வந்தேன்!

இப்படியே இரண்டு நாட்கள் சென்றன. எத் திக்கு நோக்கினும்

(8-ம் பக்கம் பார்க்க)

**இந்தியாவில், 'பிரம்மா' என்னும் ஆண்டவனின் முகத்திலிருந்தும் கைகளிலிருந்தும் கால்களிலிருந்தும் மக்கட் கூட்டம் பிறந்ததாக எண்ணி, அந்த எண்ணத்தின் அடிப்படையில் மனித சாதியை நான்கு பகுப்பாகப் பிரித்தார்கள். இத்தகைய எண்ணங்களில் இந்தியருக்கு நம்பிக்கை இருக்கும் வரை இவ்வகை கட்டுப்பாடுகளிற் சிக்குண்டு சிதையும் இவர்கள் இன்னும் சிதைந்து சீரழியவே போகிறார்கள்.**

—*இத்தாலிய வீரன்* **மாஸினி.**

போர்வாள்

30—8—47 சனிக்கிழமை

# ஒரே ஒரு ஆயுதம்!

"பச்சையப்பன் கல்லூரியா—அது சூனுமானுக்களின் உறைவிடம்!"

'திருவையாற்று அரசர் கல்லூரி முழுதும் ஒரே நாஸ்திக மயம்!"

"சேலம் நகராட்சிக் கல்லூரிமட்டுமென்ன, அந்த மாணவர் விடுதியின் முகப்பிலேயே திராவிடர் பாசறை என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது."

"அண்ணுமலைப் பல்கலைக்கழகம்தானே! அதை மூடியே தொலைத்து விடலாம். ஒரு கதர்க்கொடி இருந்தால அதைச்சுற்றி நான்கு கறுப்புக் கொடிகள் அல்லவா ஒய்யாரமாகப் பறக்கின்றன அங்கு!"

குடந்தைக் கல்லூரியையா குறிப்பிடுகிறீர்கள்! அங்கு நூறு மாணவர்களுக்கு எழுபதுபேர் கறுப்புச் சட்டைக்காரர்களாயிற்றே!"

"சிதம்பரத்து உயர்நிலைப்பள்ளி—அதுவும் அப்படித்தான்—சுத்த சூனுமானு!—"

"என்ன இருந்தாலும் காலம் இப்படியா கெட்டுப்போவது! ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி என்று ஆசிரியர் சொல்லி முடிப்பதற்குள்ளே அது எப்படி சார் ஐவர்க்குத் தேவி அழியாத பத்தினியாய் இருக்க முடியும் என்றல்லவா இந்தக் காலத்துப் பிள்ளைகள் கேட்கின்றன!"

"போமய்யா போம்! மாணவர்களைச் சொல்ல வந்து விட்டீர்! எந்த ஆசிரியர் அய்யா அவ்வளவு பொறுமையாக அந்தப் "புண்ணிய வசனத்தை"ச் சொல்லுகிறார்! ஐவர்க்கும் தேவியாம் அழியாத பத்தினியாம் என்று 'ஆம்' போட்டுத்தானே சொல்கிறார்கள், சந்தேகத் தொனியில்!"

"பண்டிதர்கள் பரமசாதுக்கள். வருவது தெரியாது போவது தெரியாது அப்படி இருந்ததுகள். அதுகள் அல்லவோ இப்போது நாயக்கர் கூட்டத்தில் முன்னணியில் நிற்கின்றன."

"அங்கே இருந்து தொலைந்தாலும் பரவாயில்லையே. பள்ளிக்கூடங்களில் புகுந்துகொண்டு பிள்ளைகள் உள்ளத்தை அல்லவா ஞான சூன்யம் ஆக்குகிறார்கள்."

"அக்கிரமம்! அக்கிரமம்! ஆண்டவனுக்குத்தான் கண்ணில்லை என்றாலும் ஓமந்தூரார் ஆட்சிக்குக் கூடவா கண்ணில்லை இந்தத் துஷ்டர்களின் துடுக்கடக்க!"

"நல்லா சொன்னீங்க போங்க! அந்த இராமசாமி நாய்க்கரே மேல், பேசுவதோடுசரி. இந்த இராமசாமி ரெட்டியாரோ காரியத்திலேயே அல்லவா நம்மவனை ஒழித்துக் கட்டுகிறார். இனி யாராவது நமக்கு நன்மை செய்வதாவது அதெல்லாம் சும்மா வெறுங் கனவு கானல் நீர்! குதிரைக் கொம்பு! அவ்வளவுதான்!"

* * *

திராவிட இன எழுச்சி கண்டு ஆரிய வட்டாரத்தில் அவதிக் குரல் எழும்பி உள்ளது. அதை அவர்கள் ஒளித்து வைக்கவுமில்லை மறைத்துப் பேசவுமில்லை திறப்பாகவே எழுதுகிறார்கள்; வெளிப்படையாகப் பேசுகிறார்கள். அவர்க

டைய உள்ளக் குமுறல் னருகவே கேட்கிறது மக்கு. அதைத்தான் மேலே குறித்துள்ளோம்.

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக நாம் அலுப்புச் சலிப்பின்றி ஆற்றி வந்த பகுத்தறிவுப் பிரசாரம் இப்போதுதான் பலன் கொடுக்கத்தொடங்கி இருக்கிறது. கேள்விப்படுவது எதுவாயினும் சரி, அதைச் சிந்தனை என்னும் உரை கல்லில் உரைத்துப் பார்த்துத்தான் நம்புவதென்ற நல்ல முடிபுக்கு மக்கள் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். வேதமாயிலும் சரி. புராணமாயினும் சரி; இதிகாசமாயினும் சரி; பகவத்கீதையாயினும் சரியே ஆராய்ச்சி மேடையில் நிமிர்ந்து நிற்க முடியாததாயின் அதனை யாம் ஒப்போம் என்று உறுதியுரை எழுப்புகின்றனர் தமிழர். ஏன் என்ற கேள்வி, எதற்காக என்ற ஆராய்ச்சி, யாரால் என்ற சந்தேகம், எப்படிப்பட்டது என்ற நினைப்பு, யாருக்காக என்ற எண்ணம் இவையும் இவைபோன்ற பலகேள்விகளும் மக்கள் மன்றத்தில் "உலா" வரத் தொடங்கி விட்டன. பழமையின் படைவீடுகள் ஒவ்வொன்றாகத் தகர்க்கப் படுகின்றன. தன்மான உணர்ச்சியும் சிந்தனை சக்தியும் காட்டுத் தீப்போல் பரவுகின்றன. மாணவர்கள் ஆசிரியர்கள் எழுத்தாளர்கள் பேச்சாளர்கள் புலவர்கள் பாமரர்கள் எல்லோருமே சுயமரியாதை இயக்கம் இருக்கும் திக்கு நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டனர். அதாவது பகுத்தறிவுப் பாதை வழி பயணம் ஆரம்பித்து விட்டனர். நேரடியாக நம் இயக்கத்தில் கலந்துகொள்ளும் நெஞ்சு உறுதியோ சூழ்நிலை வசதியோ இல்லாத எத்தனையோ ஆயிரவர் நாம் சொல்வது நியாயந்தான் என்பதை நன்குணர்ந்திருக்கின்றனர். அந்த நியாயத்தைத் தம்மால் முடிந்த அளவிற்கு—தம்முடைய வாழ்க்கை நிலை அனுமதிக்கும் எல்லைவரை அவரவர்களும் பிறருக்கு எடுத்துச் சொல்லவும் செய்கின்றனர். சூனுமானுக்கள் தங்களுடைய பரம எதிரிகள் என்று எண்ணிக் கொண்டுள்ள மாற்றுக் கட்சியினர் பலருடைய உள்ளத்திலும்கூட நம்முடைய கருத்துக்கள் ஆழப் பதிந்து விட்டன.

தமிழர் வாழ்வைச் சிதைத்தது ஆரியமே என்ற அடிப்படை உண்மையை இன்று உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும் உணரத் தலைப்பட்டுவிட்டனர். உணரவே, பழைய ஏடுகளுக்கு இருந்த மகத்துவம் குறைந்தது; வர்ணாஸ்ரமத்துக்குக் கற்பிக்கப்பட்ட தெய்வீகம் தேய்ந்தது; பஞ்சாங்க ஆட்சியின் வல்லமை வீழ்ந்தது; வாழ்வை வதைக்கும் சடங்குகள் சுருங்கின; முன்னேற்றம் என்று சொன்னால் முட்டவந்த "மாடுகள்" ஓய்ந்து ஒதுங்கின; ஒதுங்கி ஒழிந்தன. ஒழியவே, ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தை வாட்டி வதைத்து வந்த ஆரிய ஆதிக்கத்தின் அடிபீடம் ஆட்டங் கொடுத்துவிட்டது. பிராமணீயம் இன்று செய்வதறியாது திகைக்கிறது. அவர்களுடைய ஏடுகளோ இன்று தங்கள் ஆத்திரத்தை எழுதி எழுதித் தீர்த்துக் கொள்ளுகின்றன. என்ன செய்தும் காரியம் மிஞ்சிவிட்டதே—பகுத்தறிவு ஒளி தோன்றி விட்டதே என்று கண்களைக் கசக்கிக் கொள்கின்றன. அழுகுரலும் ஆத்திரமும் கலந்து பிறக்கின்றன அந்த வட்டாரத்திலிருந்து.

தன்மான இயக்கம் பரவுவதைத்தடுப்பதற்காக நாட்டிலே உள்ள ஒரு சிறு கூட்டம் தன்னுலான வழிகளையெல்லாம் கையாண்டு பார்த்துத் தோற்றுவிட்டது. அலட்சியம், நையாண்டி, கேலி, எதிர்ப்பு, சூழ்ச்சி, அச்சுறுத்தல் அத்தனை ஆயுதங்களையும் ஒவ்வொன்றாகப் பயன்படுத்திப் பார்த்து எதுவும் பயனளிக்காமல் போகவே இன்று அக்கூட்டம் தன்னுடைய கடைசீ ஆயுதமாகிய நாஸ்திகப் பூச்சாண்டியை எடுத்துவீசத் தொடங்கியிருக்கிறது.

"மதத்திற்கு ஆபத்து! ஆண்டவனுக்கு ஆபத்து! பள்ளிக்கூடங்களில் நாஸ்திகம்! ஆசிரியர்களும் சுயமரியாதைப் பிரசாரம் செய்கிறார்கள்! சமயாச்சாரியர்களைத் தாக்குகிறார்கள்! புண்ணிய புருஷர்களைத் தூஷிக்கிறார்கள்! திருவிழாக்களை எதிர்க்கிறார்கள்! பண்டிகைகளைக் கொண்டாடுவதில்லை!" என்றெல்லாம் கூக்குரல் இட்டால், மக்கள் மருண்டுபோய் எங்கே அந்த மாபாவிகள்! பிடித்து அடையுங்கள் காராக்கிரகத்தில் என்று ஓடோடி வரு

2-ம் பக்கம் பார்க்க

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்மாவின் அழும் முகம், ஏமாற்ற மடைந்த கண்கள், எனக்குத் தோற்ற மளித்தன! இப்பொழுது நம் கடமை என்ன வென்று சிந்தித்தேன். அதே சிந்தனை என் உள்ளத்தில் எந்நேரமும் சுழன்று கொண்டிருந்தது. "பத்மாவைக் கைவிடக்கூடாது! எப்படியும் காப்பாற்றியே தீரவேண்டும்! நானே தான் அவளை மணக்க வேண்டும்" இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன்!

தித்திப்பான இத் தீர்மானத்திற்கு நான் வந்ததும், திடுக்கிடும்படியான செய்தியொன்று என் செவிக் கெட்டியது! என் உள்ளம் தூள் தூளாகியது! பத்மா தற்கொலை செய்து கொண்டாள்!

அய்யோ பத்மா வென்று அலறினேன்! கதறினேன்! பிணம்போல படுத்துக் கொண்டேன்! மாதவா, பத்மா தற்கொலை செய்து கொள்ளவில்லை! என் ஆசை அவளைக் கொன்றது! என் காதலென்னும் கூரிய வாள் அவளைக் கொலைசெய்தது! நண்பா, நான்தான் காரணம் அவள் மரணத்திற்கு!

இறந்த என் இன்ப வல்லியின் உடலைச் சென்றுபார்க்க எனக்குத் தைரியம் பிறக்க வில்லை! அவள் தந்தை போலீஸ் அதிகாரியாகையால் தற்கொலை செய்து கொண்டாள் என்ற செய்தியை மறைத்து விட்டனராம். சுரம் கண்டு இறந்தாள் என்ற காரணம் கூறி, அவளைப் புதைத்து விட்டார்கள்!

இரவும் வந்தது. என் ஆசைக் களஞ்சியத்தைப் புதைத்த இடத்திற்குச் சென்று, அவ்விடத்தில் புரண்டு அழவேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தில் பலப் பட்டது! கணகண வென்று மணி பன்னிரண்டு அடித்தது. அவசர அவசரமாக எழுந்தேன். வெறியனைப் போல் ஓடினேன் மயானத்திற்கு!

மாதவா, சென்னையிலே மயானத்தைச் சுற்றிலும் மதிலிருக்கிறது. இரவிலே காவலு மிருக்கிறான் ஒருவன். காவற்காரனை அணுகி, "ஏம்பா, இங்குதானே இன்று இன்ஸ்பெக்டரின் மகளைப் புதைத்தார்கள்?" என்றேன்.

"ஆமாங்கோ!"

"எனக்கு அந்த இடத்தைக் காட்டுகிறாயா?"

"ராத்திரியிலே யாரும் உள்ளே போகக்கூடாதுங்கோ!" என்றான். நான் எவ்வளவோ கெஞ்சினேன்! அழுதேன். அவன் என்னை உள்ளே அனுப்பவே மறுத்து விட்டான்.

சட்டென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் திரும்பி ஆஸ்டலுக்கு ஓட ஆரம்பித்தேன். திடீரென்று நான் ஓடுவதைக்கண்ட அவன் உரக்கச் சிரித்தான்! என்னை அவன் அப்பொழுது பைத்தியக் காரனென்றுதான் தீர்மானித்து விட்டிருப்பான்!

ஓடினேன், ஓடினேன், ஆஸ்டலை அடைந்தேன். பெட்டியைத் திறந்தேன். இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பவும் வேகமாக ஓடிவந்தேன் சுடலைக்கு!

பத்துரூபாய் நோட்டுகள் நான்கை அவனிடம் கொடுத்தேன். திடுக்கிட்டான், ஆச்சரியப்பட்டான்! உள்ளே விடமுடியாதென்று முதலிலே உறுமியவன், பணத்தைக் கண்டதும் பல்லிளித்து, "வாங்கசாமி, காட்றேன்" என்று கூறினான். அழைத்துச் சென்றான் உள்ளே! சுடுகாட்டு அமைதி!

சிறிய மண்மேட்டைக் காட்டி, "இதுதாங்கோ சாமி, அந்த அம்மாவைப் புதைச்ச இடம்" என்றான். வேரற்ற மரம்போல் அதன்மேல் வீழ்ந்தேன். உணர்ச்சி வந்து கண்ணை விழித்துப் பார்த்தேன்! என் காதற் சமாதியின்மேல் வீழ்ந்து கிடந்தேன்!

என் மனதிற்கு மகிழ்ச்சி தந்த அழகி பத்மா மண்ணுள் மறைந்திருந்தாள்! பத்மா, பத்மா என்று கதறினேன்! மண்ணைக் கைகளால் அழுத்தி அழுத்தி அழுதேன்! என் மனத்தே ஒரு புதிய ஆசையெழுந்தது!

வெட்டியானைத் திரும்பிப் பார்த்தேன். அவன் கையில் வைத்துக் கொண்டிருந்த சிறிய விளக்கைக் கீழேவைத்து விட்டு, என்னையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்!

"வெட்டியானே! நான் சொல்லுவதைத் தயவுசெய்து கேட்கிறாயா?"

"என்னுங்கோ?"

"இந்த மண்ணை எடுத்துவி
உள்ளே புதைத்திருக்கும் அ
வெளியே எடுத்துக் காட்டுகிறாய
என்றேன். கெஞ்சும் குர
அவன் மிரண்டான்! முடியாெ
றான்! சட்டம் அவனைத் தண்டி
மென்று பயந்தான்.

என்னிடம் மீதி யிருந்த நோ
களை அப்படியே அவனிடம்கொ
தேன். பணத்தைப் பார்த்
அவன் பயம் எங்கோ பறந்து
டது! ஓடினான். சிறிது நேர
மண்வெட்டியோடு திரும்பி
தான். மாண்ட என் இதய ஒளி
மேல் மூடியிருந்த மண்ணைச் சி
சிறிதாக அப்புறப் படுத்தி
"வெட்டியானே, பார்த்து.
வெட்டி அவள்மேலே படப் போ
றது!" என்று வறண்ட சொ
லால் எச்சரித்துக் கொண்
யிருந்தேன்.

"சாமி! மேலே தூக்குங்க
என்றான். இறந்த என் இன்ப
வெளியே தூக்கினேன்! அ
உயிராயிருக்கும்போது பல
அவளைத் தூக்கிக் கட்டிலின்
உட்கார வைத்திருக்கிறேன்.
பொழுது, நான் தூக்கும் போ
லாம், அவள் செவ்விதழ்க
ருந்து சிரிப்புச் சிந்தும்! ஆ
இப்பொழுதோ, அவள் உடல்
வதிலுமிருந்து மண் சிந்தியது!

அவளை வெளியே எடுத்து வை
தேன். வெட்டியான் அருகே வி
கைப் பிடித்துக் கொண்டு உட்கா
தான். அவள் உடல் முழுவதை
துடைத்தேன். மதிபோன்ற அ
முகத்தில் படிந்திருந்த மண்
கைகளாலும் கண்ணீரா
துடைத்தேன்! அவள் தலை
தூக்கி என் மடிமீது வைத்
கொண்டேன், என் இருகரங்க
ளும் அவள் முகத்தைத் தட
கொடுத்தேன்.

மலையருவியைப்போல என் க
ண்ணீர் ஓடி வந்தது. என் உள்ள
துன்பத்தின் உச்சநிலையை அ
தது. "பத்மா! என் அன்பே! உ
கெப்படி கண்ணே, இவ்வ
தைரியம் வந்தது! பெற்றோர் எ
விஷக்காற்று வீசாதிருந்தால்
வாழ்வு இப்படிச் சிதைந்திருக்கு
பத்மா, நான் துரோகி, வஞ்சக
மோசக்காரன், கசடன்" இட்
கதறிக் கதறி என் தலையில் அ

(12-ம் பக்கம் பார்க்க)

# இதய ஒலி கேட்கிறது!

[சாக்ரடீஸ்]

விடம்! இது வெறும்
அல்ல இன்று. திராவிட
ாயத்தின் எழுச்சிக் குரல்;
ாடி திராவிடர்களின் இதய
ஆயிரமாயிரம் இளங் காளை
டய "இலட்சிய பூமி".
நாடு திராவிடருக்கே என்று
கள் சொல்வது வெறும்
தை அலங்காரம் அல்ல!
களை அப்படியும் இப்படி
ருட்டிவிட்டு அலை உரு
ஓசையில் ஆநந்தம் பிறக்
என்று சொல்லும் "ஜால
த" அல்ல! கீறல் விழுந்த
போன் பிளேட்டின் சத்தம்
—"தினசரி" நினைப்ப
போல. குடைத்துணிக்
ளின் காட்டுக் கூச்சல்
—"பாரத தேவி" மனப்
குடிப்பதைப் போல.
த்த காலுக்கு முத்தமிடும்
து அல்ல — சென்னைத்
ழ் முரசு" அலர் தூற்று
போல! இரு முகம்
தாரின் "இரட்டை நாக்
பேச்சும் அல்ல—"ஜன
பழி சுமத்துவதைப்
அது, கிழக்கு வெளுத்து
து என்பதற்கான அறி
ாழ்ந்த சமுதாயம்-இல்லை,
தப்பட்ட சமுதாயம்-தன்
நான் அறிந்துகொண்டு,
வீழ்த்தும் மாற்றாரின்
யும் பக்குவத்தையும்
கொண்டு, தான் இருக்
ாடு தனது என்பதை
ர்ந்து கொண்டு அது
க உரிமையாம் என்பதை
குரலில் உலகுக்கு அறி
உரிமை முழக்கம்.

க்கு தெற்கை அடிமைப்
ஆகாது என்ற உண்
இன்று நம் நாடு [illegible]
அறியும் [illegible]

யிருக்கிறது. தினசரிகளின் திடீர்த் தாக்குதல்களையும் காமராஜர்கள் எய்யும் அம்புகளையும் மீறிக்கொண்டு நமது நாதம் காங்கிரஸ் வட்டாரத்திலும் புகுந்து விட்டது. ஏன் புகாது? வடநாட்டு ஹிந்தி தென்னாட்டவர் மீது தேசிய மொழியாகத் திணிக்கப் படுவதைப் பார்க்கும் அவர்கள் கண்கள்-அரசியல் அமைப்பு மன்றத்தில் ஒளி வீசுவது தமிழ் அல்ல; பிற திராவிட மொழிகள் அல்ல; வடவர் மொழி என்பதைக் கேட்கும் அவர்கள் செவிகள் — ஆண்டாண்டு தோறும் இந்திய தேசிய காங்கிரசிற்குத் தலைவராக வருவோர் தென்னாட்டவர் அல்ல — வடநாட்டவரே என்பதை எண்ணும் அவர்கள் உள்ளம்—இவை என்ன முடிவுக்கு வரமுடியும், திராவிடநாடு திராவிடருக்கே என்பதைத் தவிர?

தேசிய காங்கிரசின் தலைமைப் பீடம் அலகாபாத்! அரசியல் அமைப்பு மன்றம் கூடுமிடம் டெல்லி! இந்திய அரசாங்கம் வேனிலில் தங்குமிடம் சிம்லா! நமது ஆடைகள் உற்பத்தியாகுமிடம் ஷோலாபூர். நம் வீட்டிற்குப் பூசும் சிமிட்டி தயாராவது டால்மியா கம்பெனியில். நமக்கு வேண்டிய இரும்பு உற்பத்தியாவது ஜெம்ஷட்பூர் டாடாவிடம். கூட்டங் கூட்டமாகப் பஞ்சாலைகள் திரண்டுள்ள இடம் பம்பாய். இதையெல்லாம் எண்ணிப் பார்க்க மாட்டானா தேசியத் தமிழன்? எண்ணிப் பார்த்தால் இந்த அடிமைத்தனம் தொலைய வேண்டும் என்று திராவிடர் கழகம் சொல்வதிலே நியாயம் இருக்கத் தான் செய்கிறது [illegible] அவன் நெஞ்சு [illegible]

லாதா? சொல்லிற்று. சொல்லவேதான் நமது நாதம் அங்கேயும் எழும்பி விட்டது.

பொழுது புலர்ந்ததும் தேசியவாதி படிக்கிறான் இந்தியன் எக்ஸ்பிரஸ்—அது கொயங்காவுடையது. பொழுது சாய்ந்ததும் மறுபடியும் படிக்கிறான்—இப்போது படிப்பது தினமணி-அதுவும் கொயங்காவுடையது. தென்னாட்டில் இரண்டு பெரிய தினசரிகள் வடநாட்டுச் சீமானிடம்; இந்த நிலை அடுக்குமா என்று அவன் வாய்விட்டுச் சொல்லமாட்டானா? சொன்னால் திராவிடநாடு தனிநாடாக வேண்டும் என்பதை அவன் ஒப்புக் கொண்டதாகத் தானே அர்த்தம்.

"தமிழ் முரசு" ஆசிரியர் காலையில் எழுந்திருக்கிறார்! கொஞ்சம் கடன் வாங்க வேண்டும் பத்திரிகையை விருத்தி செய்ய என்று எண்ணுகிறார்! பணம் எங்கே கிடைக்கும் என்று தன் கூட்டுத் தோழரைக் கேட்கிறார்; அவர் **சௌகார்பேட்டை** என்று சொல்லுகிறார். கேட்டதும் "தமிழ்முரசு" ஆசிரியர் தமிழ் நாட்டுச் சென்னையில்—தலையைக் கொடுத்தேனும் பெற்றுத் தீர வேண்டிய தமிழர் தலைநகரில் சௌகார்களுக்குப் பேட்டை ஒன்று எப்படி வந்தது என்று நினைக்கமாட்டாரா? நினைத்துவிட்டு அதற்கு மாற்று ஏதும் தேடாமல் அவரால் சும்மா இருக்க முடியுமா? முடியாதென்றால் திராவிடர்கழகத்தின் இலட்சியத்தை அவர் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறாரோ இல்லையோ, அவருடைய உள்ளம் அந்தப் பக்கம் நோக்கித் தானே செல்லும்.

தலைவர் காமராஜர் வடநாடு செல்கிறார், அ. கி. சபைக்கு! எழுந்து எழுந்து பேசுபவர்கள் பண்டிதர்களும் பந்தக்களும் படேல்களும் பிரசாத்களுமாக இருக்கிறார்களே தவிர நாயுடுவோ, செட்டியாரோ, முதலியாரோ இல்லை என்பதை நேரில் காண்கிறார். கண்டதும் நினைக்க மாட்டாரா அரசியல் அமைப்பு மன்றம் சென்னையில் இருந்திருந்தால் இந்த நிலை இருக்குமா, இருக்க விடுவேனா என்று; அந்த நினைப்பு நெஞ்சில் எழுந்ததும் அடுத்த நினைப்பு, "ஈரோட்டுத் தாடிக்காரரை"ப் பற்றித்தானே இருக்க முடியும்?

அமைச்சர் அவினாசிலிங்கம் இராமகிருஷ்ண மடத்திற்கு "விஜயம்" செய்கிறார். அங்கு மாட்டப்பட்டிருப்பது விவேகாநந்தர் படம். வணங்குவார் முதலில், பிறகு எண்ணுவார்; என்ன இருந்தாலும் வடநாட்டுச் சமயாசாரியர்க்கு உள்ள மதிப்பு இத் தென்னாட்டுச் சமயத் தலைவர்களுக்கு இல்லை என்று. ஏன் எண்ணமாட்டார்? இராமகிருஷ்ண மடத்திற்குச் சென்றுவிட்டு வடலூர் இராமலிங்கர் மடத்திற்கும் சென்றால் அவருக்கு இயற்கையாகவே இந்த எண்ணம்தானே தோன்றும்?

தேசிய வட்டாரத்தில் நமது கீதம் இன்று இசைக்கப்படுகிறது. இசைக்கப்படுகிறது என்றால் அதற்குரிய முழு சோபிதத்தோடு அல்ல; 'ஏனோதானோ' மெட்டில் தான் இசைக்கப் படுகிறது. சுருதி கொஞ்சம் கட்டைதான்! ஆனால் துவக்கம் இதுதானே! போகப்போக இசை உள்ளத்தை உருக்கும் அளவிற்கு அழகு பெற்றுவிடும். இதில் நமக்கு ஐயம் சிறிதும் இல்லை.

தமிழ்நாடு தமிழருக்கே என்று பெரியார் இராமசாமி 1938-ல் உரிமை முழக்கம் புரிந்தபோது அதைக் கேலி செய்த அதே தேசியக் குரல்தான் இன்று வலிந்து வலிந்து அந்த நாதத்தை எழுப்புகிறது என்பதை நினைவூட்டிக் கொண்டால் திராவிட நாடு திராவிடருக்கே என்ற ஒலி தேசியச் சூழலில் நாளை பிறக்கும், பிறந்தே தீரும் என்ற நமது கருத்து அவ்வளவு வியப்பாகத் தோன்றாது.

யாருக்கேனும் வியப்பாக இருக்குமானால் அவர்கள் "தமிழ் மணி" சென்ற திங்கள் எழுதி உள்ள இந்த வாசகங்களைப் படிக்கட்டும். படிக்கும்போது நெஞ்சில் நிறுத்தட்டும் தேசியத் தமிழ்மணி இந்தி எதிர்ப்புக் காலத்தில் நம்மீது வீசிய வாள் நம் மார்பில் ஏற்படுத்திய வடுக்கள் இன்னும் மறையவில்லை ஆனால் "தமிழ் மணி" இன்று உண்மையிலேயே தமிழ்மணியாக மாறி வருகிறது; திராவிட முரசை ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.

இதோ பாருங்கள் "தமிழ் மணி"யின் "மனோரதம்" செல்லும் விதத்தை:—

"தமிழர் பூரண சுதந்திரத்துடன் வாழ வேண்டுமானால் தமிழ்நாடு தமிழருக்காக வேண்டும். தமிழ்நாடு தமிழருக்காக வேண்டுமானால் உண்மைத் தமிழர் யார்? தமிழருக்கு ஊறுசெய்யும் ஐந்தாம்படைத் தமிழர் யார் என்பவைகளை நன்றாக அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

"அப்படிப்பார்த்தால் ஆச்சாரியார் கோஷ்டி நம் கண்முன்னே தோன்றும்."

"அதையும் ஊடுருவிப் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்த்தால் ஆச்சாரியார் கோஷ்டி மட்டுமல்ல
ஆச்சாரியாரின் வர்க்கமே
வாகத் தெரியும்."

"அதுவும் தெரிந்துவிட்
இந்த வர்க்கத்தின் ஆதி
றும், அவர்கள் இந்நா
நுழைந்த வழிகளும் தெ
விடும்."

"அதுவும் தெரிந்துவிட்
தமிழராகிய நமக்கும் அ
ளுக்குமுள்ள வேற்றுமை
வெகு தெளிவாகத் தெ
விடும்."

"அந்த வேற்றுமைகளை
ண்டு நாம் ஒரு தனியினம்,
கள் ஒரு தனியினம் என்
வுக்கு சுலபத்தில் வந்
லாம்."

"இங்ஙனம் நாம் நம்மு
இனத்தை அறிய ஆரம்
விட்டால் நம்மிடையே ஒற்
தானாக வளரும்."

"ஒற்றுமை வளர்ந்துவிட்
ஆச்சாரியார் கோஷ்டி நம்
பிரித்துவைத்திருக்கும்
கள் சுக்கு நூறாக உடைய
போகும்."

"சூழ்ச்சியை நாம் உண
விட்டோமானால் அந்த கோ
யாரின் ஆட்சியையும் சுலப
உடைத்து விடலாம்."

"அப்படி அந்த கோஷ்டிய
ஆட்சி அழிந்துபோனால்
களை நம்பி வாழும் வட
முதலாளிகளும் வந்த வழி
பார்ப்பார்கள்."

"இவ்வளவும் நிறை
விட்டால் வெற்றி நமதே."

ஆம், ஐயமில்லை, இவ்வ
நிறைவேறி விட்டால்
நமதேதான். வெற்றி நமத
குத்தான் திராவிடர்
ஓயாதுழைக்கிறது. உழைக்
என்பதைத் தமிழ்மணி
கொள்ளுமோ ஒப்புக்
ளாதோ நாம் அறியோம்.

நம் இலட்சியத்தை ஒப்புக் கொள்கிறது; அந்த அளவிற்கு மகிழ்ச்சி.

வெற்றி புரிக்கு உரிய பாதை க் காட்டியதோடு "தமிழ் மணி" நிற்கவில்லை—வரலாற் றையே துணைக்கு அழைத்து ரியம் திராவிடத்தைச் சிதைத்த த்தைத் தெளிவான தமிழில் திரித்தும் இருக்கிறது.

"இந்திய நாட்டுச் சரித்திரத் தைச் சற்றுப் புரட்டிப் பாருங் கள்" என்கிறது "தமிழ்மணி." ட்டித்தான் பார்ப்போமே! ட்டினால் என்ன காணப் படும்? சொல்கிறது "தமிழ்மணி":—

"அன்னியர் குடிபுகுந்த வர றுகள் அடுக்கடுக்காகக் காணப்படும். அதுபோலவே யம் முதல் குமரிவரை பரவி வாழ்ந்த தென்னிந்திய திரா விட இனத்தைச் சேர்ந்த தமிழர் கொஞ்சங் கொஞ்சமாக தெற்கே துரத்தப்பட்ட செய்தி கிடைக்கும். ஆடு மாடு மேய்த்துக்கொண்டு கைபர் போலன் கணவாய்களின் வழி ஆரியக் கூட்டம் உள்ளே நுழைந்த செய்தியும் கிடைக் கும். அரசாண்ட தமிழினம், அதாவது திராவிட இனம் அடிமையாக்கப்பட்ட வரலா று அழகாகத் தெரியும், இதற் கெல்லாம் அரிய பெரிய ஆராய்ச் சிகள் தேவையில்லை; ஐந்தாம் வகுப்பு புத்தகத்தின் ஆரம்பத்தி லேயே இந்தச் செய்திகள் உங் களுக்குக் கிடைக்கும்."

தமிழ்மணியா இப்படிச் சொல் வது என்று திகைப்பீர்கள்— அதிலும் 1937-40-ம் ஆண்டுக ளில் "தமிழ்மணி"யைப் படித் திருந்தால் திகைப்பு மேலும் மேலும் வளரத்தான் செய்யும். உங்களும் திகைப்பை அடக்கி கொண்டு இதோ இந்த வாசகங் களையும் படியுங்கள்.

"தமிழ்நாடு நீர்வளம், நில வளம் செறிந்த நாடு. பரந்த நிலப்பரப்பு. வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள் களும் இந்த நாட்டில் கிடைக் கும். கூடுமானவரையில் தமிழ் நாடு தனித்து நிற்கும ஆற்றல் படைத்தது. அப்படியிருக்க வறுமையும், வாட்டமும் இந்த நாட்டைச் சீரழிக்கின்றன வெனில் அதற்குக் காரணம் என்ன? தமிழ் நாட்டார் தம்மு டைய நாடு எது என்பதை உண ராமலும் வடநாட்டையே தம க்கு வழி காட்டியாகக் கொண்ட தாலேயாகும். இப்படிப்பட்ட ஏமாந்த தனத்தினால்தான் இந் நாட்டில் மார்வாடி, குஜராத்தி களின் வட்டிக்கடைகள் மலிந் தன. தமிழ் நாட்டின் தலைநக ரிலே சௌகார்பேட்டை என்ற பெயரிலே வட நாட்டாரின் மாட மாளிகை கூடகோபுரங்கள் நிறை ந்ததோர் பகுதி ஏற்பட லாயிற்று."

"வெள்ளையர் ஆட்சியைக் கண் டும், அவர்களுடைய வியாபாரப் பெருக்கத்தைக்கண்டும் அன்று நாம் வருந்தியதுபோல இந்த வடநாட்டார் ஆதிக்கத்தையும், சுரண்டலையும் கண்டு வருந்தி யிருந்தால் ஒரு சௌகார்பேட் டை உற்பத்தியாகியிருக்குமா? அதுமட்டுமல்ல. டாட்டாக்க ளும், டால்மியாக்களும், கோயங் காக்களும் இவ்வளவு தூரம் தமிழ் நாட்டில் தழைத்திருக்க முடியுமா? தயவுசெய்து தமிழர் இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

"வெள்ளையர் கொள்ளை யடிக்காமல் வேறு யாராவது கொள்ளையடித்தால்மட்டும் அது கொள்ளை யல்லவா? இம்மாதிரி வடநாட்டு ஆதிக்கம் நாளுக்குநாள் வளர்ந்து வருவதை நாம் உணராமல் இருப்பது எவ்வளவு ஆபத்தா னது பாருங்கள்."

வளர்ந்துவரும் வடநாட்டு ஆதிக்கத்தை உணராமல் இருப் பது ஆபத்தானதுதான்—ஆபத் தானதுமட்டுமல்ல; திராவிடரின் வருங்கால வாழ்க்கையையே சிதைத்துவிடும் தன்மை வாய்ந் ததுதான்.

இதைத் திராவிடர் கழகம் நன்கு உணர்ந்திருக்கிறது; உணர்ந்ததுடன் நில்லாமல் மக் கள் மனறத்திற்கு இந்த உண் மையை நெடுநாட்களாகவே சொல்லிவந்திருக்கிறது. இன்று காங்கிரஸ் வட்டாரத்திலும் இந்த ஒலி எழுகிறது. ஆம், தமிழன் இதய ஒலி கேட்கிறது! அதுதானே நமக்கும் தேவை— அவன் எங்கே இருந்தால் என்ன?

## சீர்திருத்தத் திருமணம்

தோழர் நடராசன் அவர்க ளுக்கும தோழியர் சீவாதகி னம் அவர்கட்கும் 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியார் தலைமையில் மாஹம்பதியில் சீர் திருத்தத் திருமணம் 22.8-48-ல் நடந்தது. போர்வாள் வளர்ச்சி பெற ரூ. ?-ம் திராவிடநாட்டுக் காக ரூ. ?-ம் விடுதலைக்காக ரூ 10-ம் நன்கொடை வழங்கப் பட்டது. பெரியாரும் திரு மணத்தில் கலந்துகொண்டார்.

பொதுக்கூட்டம் அன்று மாலை. கருஞ்சட்டையினர் அணி வகுப்போடு பெரியார், மணி மொழியார் இருவரும் ஊர்வல மாக அழைத்துச் செல்லப்பட்ட னர். கூட்டத்திற்கு மணி மொழியார் தலைமை வகித்தார். திராவிடர் கழக நோக்கங்களைப் பெரியார் விளக்கினார். ரூ. 101 கொண்ட பணமுடிப்பு பெரியா ருக்கு வழங்கப்பட்டது. C.V.M. அண்ணாமலை, சின்னையா, மா. தேவராசன் பேச் சுக்களின்பின் இரவு 10 மணி க்கு கூட்டம் முடிவுற்றது.




### இதுமட்டும் போதாது !

தஞ்சாவூரை 'டேஞ்சூர்' என்றும், தூத்துக்குடியை 'டூடிகொரின்' என்றும் திருநெல்வேலியை 'டின்னவெலி' என்றும் குமரி முனையை 'கேப் காமரின்' என்றும், திருவல்லிக்கேணியை 'ட்ரிப்ளிகேன்' என்றும், எழும்பூரை 'எக்மோர்' என்றும், விழுப்புரத்தை விலுபுரம், என்றும், வந்தவாசியை 'வண்டிவாஷ்' என்றுமெல்லாம் ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டுப் பெயர்களைச் சிதைத்து வழங்கினர், அழகு தமிழ் அவர்கள் வாயில் நுழையாத காரணத்தால். நமது "ஆளவந்தார்கள்" இச் சித்திரவதையைத் தடுத்துவிட்டு பழைய தமிழ்ச் சொற்களேயே மீண்டும் கையாள்வதென்று சட்டமிடப்போவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. இது உண்மையானல் சென்னை அரசியலார்க்கு நமது பாராட்டும் நன்றியும். ஆனல் இதுமட்டும் போதாது. உண்மையிலேயே நம் தமிழுக்கு ஆக்கம் தருவது ஆட்சியினர் கருத்தாயின், அவர்கள் மற்றென்றும் செய்தல் வேண்டும். எங்கெந்த ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் மறைக்கப்பட்டு வடசொற் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளனவோ அந்தந்த ஊர்களில் எல்லாம் மறுபடியும் தமிழ்ப் பெயரை நிலை நாட்டவேண்டும். பழமலை என்ற பெயர் இருக்க விருத்தாசலம் என்ற வடமொழி எதற்கு? கழுக்குன்றம் என்ற தமிழ்ச்சொல்லை நீக்கிவிட்டு பக்ஷிதீர்த்தம் என்ற ஆரிய மொழியை நுழைப்பது ஏன்? மறைக்காடு என்பதை வழங்காமல் வேதாரண்யம் என்ற ஆரிய சொல்லை வழங்குவானேன்? ஆங்கிலம் அந்நியமொழி ஆகவே ஆங்கிலப் பெயர்கள் கூடாது என்றால் ஆரியம் மட்டும் என்ன மொழி? என்வே அரசியலார் ஆங்கிலப் பெயர்களை [illegible]தறிவதுபோலவே ஆரியப் பெயர்களையும் ஒழித்துக் கட்ட வேண்டும். ஓமாந்தூரார் ஆட்சி இதைச் செய்யுமா? செய்யத் துணிவிருக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

### அகஸ்தியர் கோட்டை.

மேற்படி 'பெயர் மாற்றுஞ் செயலை' ஒட்டி குண்டூர் சீதாராம சாஸ்திரியார் அருமையான யோசனை ஒன்றைச் சொல்கிறார் சென்னை அரசாங்கத்தார்க்கு. சென்னைக் கோட்டையின் பெயர் செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்றிருப்பது நமது தன்மானத்திற்கு இழுக்காம். சுயராஜ்ய தத்துவத்திற்கும் விரோதமாம். காதால் கேட்பதற்கும் அழகாயில்லையாம். வாயால் உச்சரிப்பதற்கும் பொருத்தப் படவில்லையாம். ஏன் இவ்வளவு தொல்லை நமக்கு? அகஸ்தியர் கோட்டை என்றபெயர் இருக்கட்டுமே என்கிறார் சாஸ்திரியார். "இருக்கட்டுமே! இருந்தால் என்ன?

சென்னை,' கடலில் முழு
போய்விடும்?" என்று எ
ணியோ என்னவோ ஹிந்து
திரிகை சாஸ்திரியார் கருத்
சிறப்பான முறையில வெளி
டிருக்கிறது. என்ன இரு
லும் அகஸ்தியர் பெயர் கூட
சார். நாம் என்ன புராண
வாசிகளா என்கிறான் நம் ஆ
பையன். அவன் கிடக்கி
சின்னப்பயல்! அவனுக்கெ
தெரியும் அகஸ்தியர் மகத்து

### ஆசை வெட்கமறியாது !

"அதி தீட்சண்ணிய பு
சாலித்தனத்தில்" குண்டூர் 
ராம சாஸ்திரிக்குத் தாம் சிற
இளைத்தவரல்ல என்பதை
காட்டிவிட்டார் சென்னை 
சுப்பிரமணிய அய்யர். சாஸ்
யாராவது சென்னைக் கோ
டையை அகஸ்தியர் கோட்
பாக்குவதோடு நின்றுவிட்ட
ஆனல் அய்யர் அவர்க
சென்னை மாகாணத்தை
சமஸ்கிருத மாகாணம் ஆ
வேண்டும் என்று துடியா
துடிக்கிறார். சென்னை குப்பு
சாஸ்திரி ஆராய்ச்சி மன்றத்
ஆண்டு விழா அண்மையில் ந
பெற்றதல்லவா (நடைபெற்
என்பதை இப்போதாவது 
ந்து கொள்ளுங்கள்) அப்போ
அதன் செயலாளர் பாலசுப்
மணிய அய்யர் குறிப்பிட்ட
வடமொழியைச் சென்னை மா
ணத்தில் உள்ள ஒவ்வொரு
ளிக் கூடத்திலும் ஒவ்வொ
வீட்டிலும் நுழைத்தே தீர
வேண்டும் என்று. செத்
போன ஒரு மொழியை 
தோறும் நுழைக்கப் போ
ராமே அய்யர் அவர்கள், 
எப்படித்தான் செய்வாரோ
ஒருக்கால் அவர் மாயாவியோ
அல்லது மந்திரவாதம் தெ
வரோ? இல்லை, நினைத்த

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar